




கிருஷ்ணகிரி முதல் நீலகிரி வரை மேற்கு மண்டலத்தில் உள்ள 21 கழக மாவட்டங்களில், 61 சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் கிளைவார்டுகளுக்கும் பாகங்களுக்கும் இளைஞர் அணி நிர்வாகிகள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியை மேற்கொள்ளும் வகையில், இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் 9 பேருக்கும் தலா 2 கழக மாவட்டங்கள் என பிரித்தளிக்கப்பட்ட நிலையில், அவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் இருந்து பெற்ற நிர்வாகிகள் பட்டியலை, இளைஞர் அணி தலைமையகமான ‘அன்பகத்தில்’ வழங்கி வருகின்றனர். அங்கு அவர்கள் மேற்கொண்ட பணிகளை, 13.10.2025 அன்று கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் அறிக்கையாக வழங்கி, கள நிலவரம் குறித்து விளக்கினர். மேலும் இந்தக் கூட்டத்தில் மற்ற மண்டலங்களிலும் இந்த முறைப்படியே நிர்வாகிகளைத் தேர்வுசெய்யலாம் என முடிவு செய்யப்பட்டது.







கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையில், 2026 சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள் குறித்து, புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற உள்ளன. அந்த வகையில், சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஆயிரம்விளக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் உள்ள ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டம் மாநில துணைச் செயலாளர் ஜோயல் முன்னிலையில், அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வருகின்ற 2026 தேர்தலை எப்படி எதிர்கொள்வது, அவற்றில் இளைஞர்களுக்கான பணிகள் என்ன, SIR போன்ற முன்னெடுப்புகளை எவ்வாறு எதிர்கொள்வது என்று தகவல்தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி. லெனின் இளைஞர்களிடம் எடுத்துரைத்துப் பேசினார். ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிற்றரசு, பிரகாஷ் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பகுதி செயலாளர் அன்பு துரை ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர். மேலும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட புதிய நிர்வாகிகள் அனைவருக்கும் Minute Book வழங்கப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்ட எம்.எம்.16, நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில், கூட்டுறவு மெகா பட்டாசுக் கடையினை, அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் 12.10.2025 அன்று திறந்து வைத்து, முதல் விற்பனையினை துவக்கி வைத்தார். உடன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் திருமதி.ம.தீபாசங்கரி, கே.கே.செல்லப்பாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் வட்டார விசைத்தறி உரிமையாளர்கள் சங்கங்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையே தீபாவளி போனஸ் குறித்து சுமூக பேச்சுவார்த்தைக்கு பின் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் – மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ. சாமிநாதன் முன்னிலையில் உடன்பாடு ஏற்பட்டது. இதில் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், ராசி கே.ஆர்.முத்துக்குமார், நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம், கே.சந்திரசேகரன், எம்.எஸ்.மோகனசெல்வம் உள்பட கழக நிர்வாகிகள், விசைத்தறி உரிமையாளர்கள் மற்றும் தொழிற்சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.